Eelakesari Educational Supplement

விலை சதம் 3

ஓம்

# ஈழகேசரி

(கல்வி அனுபந்தம்)

"கற்பவை கற்றுக் கற்றுங் கொழுக"

புத்தகம் 2 } சுன்னாகம்: வெகுதானிய௵ ஐப்பசி௴ ௧௪௨ (30-10-38) { இல. 3

## கல்வி-31.

(தமிழாசிரியர், திரு. கா. இளையதம்பி அவர்கள்)

விரிந்த மனமும் பரந்த நோக்கமு முடைமைக்கு வேண்டப்படுவது கல்வி யொன்றேயாம். காண்டல், கேட்டல், கற்றல், அவதானித்தல் முதலாந் தொழில்களான் மனம் விரிதற்குச் சிந்தனை, தியானம், நியாயமென்பன துணைநின்றாலன்றி அவ்விரிவுண்டாகாது. மனவிரி வுண்டாமிடத்துப் பரந்தநோக்க முண்டாகும் இது பற்றியே கலைகளை யெல்லாஞ் சாஸ்திர சம்மதமாய்க் கற்கவேண்டு மென்பது. எழுத்துஞ், சொல்லும், வாக்கியமும், இலக்கியமு மொன்றுக் கொன்று துணையாய் நின்று சாஸ்திர சம்மதமாய் முடியும். மற்றைய இதிகாச முதலியனவும் சாஸ்திர ரீதியாய்க் கற்கப்படாவிடின் பேறு யாதாய் முடியும்? பாஷா சாஸ்திரம் இலக்கணமன்றோ? பூமிசாஸ்திரம் முதலியன நியாயந்தேடிக் கற்கப்படாவிடின் இலக்கை யடைதல் சாத்தியப்படாது.

நாமிதுவரையில் நாட்டுச் சீவன சாஸ்திர பாடத்திலும் கவனத்தைச் செலுத்தினோமல்லம். எம்மைச் சூழவரவுள்ள பொருள்களை யவதானித்தலையே நாட்டுச் சீவனசாஸ்திரங் கருதுகின்றது. இன்னதின்னது இருந்த படியிப்படியென்று கண்டறிதலும் சாஸ்திரக் கலையென்பர். இத்தகைய சாஸ்திரக்கலையையே இக்காலத்திலே இத்தேசத்திலே பெரிதும் விரும்பிக் கற்கின்றனர். "சொற்றவற்றியலான்" மற்றைய பிறவுந் தெற்றென வுணர்தல் தெள்ளியோர்க்கியலாது. ஒன்றின் குணம், சேர்க்கை, சீவியசரிதை முதலாயின ஆரம்பகல்வியாகக் கற்கப்படவேண்டிய அவசியத்தை நாமும் வற்புறுத்துகின்றோம். கற்றல் வாய்த்த விடத்து நியாயந்தேடுத லின்றி யமையாது. அதற்குத் தகுந்த ஆராய்ச்சி வேண்டப்படுமென்பதும், அவ்வாராய்ச்சியை நடப்பித்தற்கு வேண்டுஞ் சாதனங்களும், இடம்பொருளேவல்களும் கிடைப்பதருமையென்பதும் சொல்லாமலே யமையும்.

முகிலிலிருந்து தோன்றும் மின்சத்தை மனிதனேவல் கொள்ளுகிறான்! நீர்வீழ்ச்சியிடத்துண்டாகும் மின்னையிழுத்துப் பணி செய்விக்கின்றான் பாய்ந்தோடும் சலத்தை மறித்துக் கட்டி, நீர்ப்பாய்ச்சுகிறான். வீசுங் காற்றும் அவனேவலைப்புரிகின்றதே. சலமும் தன்னைப் போல ஆயிரத்தறுநூற்றுச் சொச்ச வியாபகத்தில் நீராவியாகி யவனேவலைத் தாராளமாகச் செய்து முடிக்கின்றதே. இஃதெல்லாங் கலாவினோதமேயன்றிப் பிறிதொன்றல்ல. பலன்தராதன நற்பலனைத் தரவும், சுவையாதன சுவைக்கவும், உபயோகமற்றன உபயோகப்படவும், வாழ்க்கைக்குப் பிரதிகூலமாயின வனுகூலப்படவுஞ் செய்வது சாஸ்திரக்கலையன்றோ? அர்சிதமென்னும் பிராணவாயு குன்றிய விடத்து அதனைப் பூரகஞ்செய்யாது விடுகின்றானா? கரைதுறைதெரியாது பன்னாட் பயணஞ் செய்யுஞ் சமுத்திரத்திலும் சுத்த சலத்தைப் பானம் பண்ணுமிவனுக் கரியதெது? பறவைகளாகாயத்திலே பறந்து செல்வதின் காரணத்தை விசாரித்துத் தானும் விமானத்திலேறிப் பறக்கிறானே. விமானமின்றியும் பறக்கவகை தேடுகிறான்; பரீட்சிக்கிறான். சுவாத்திய வேறுபாடு நோக்காது பூமுகமெங்கணுஞ் சஞ்சாரஞ் செய்தலும், சீவித்தலு மவனுக்கியல்பாயிற்றே. மிருகங்களை மாத்திரமன்றிப் பூச்சிகளையுமேவல்கொள்ளுகின்றான்.

முன்னொருகாலத்திலே சின்னாசியாவிலே சிமெர்னாவிலே அத்திப் பழங்கள் மிகுத்திருந்தன. அங்குள்ளார் அவற்றை அமரிக்காவுக்கனுப்பிப் பெருத்த லாபமடைந்தனர். இதைக்கண்ட அமரிக்கர் அத்திச் செடிகளை யெடுப்பித்துத் தங்கள் தேயத்திலே நாட்டிப் பயிராக்கினர். அவை செழித்து வளர்ந்து பூத்துங் காய்த்ததில்லை. தம்மை அனுப்பிப் போட்டார்கள் சிமெர்னாவிலுள்ளாரென்று அமரிக்கர் நினைந்து தாமேயங்குச் சென்று செழிப்பான தகுந்த செடிகளை விலைக்குவாங்கிக்கொண்டு போயினர். அவையும் பூத்தனவேயன்றிப் பழந்தந்தனவல்ல. காட்டத்திக்கிளைகளைக் கொணர்ந்து இந்த நல்லத்திச் செடிகளோடு கட்டிவைத்து அவற்றைக் காய்க்கச் செய்தனர். பின்னர் காட்டத்திச் செடிகளையும் இந்த நல்லத்திச் செடிகளுக் கயலிலே பயிராக்கி யவற்றின் பூக்களிலுள்ள மகரந்தப் பொடியைச் சேகரித்து நல்லத்திச் செடியின் பூக்கள் தோறுந் தூவினார்கள். இதனால் நல்லத்திகள் பூத்துக் காய்த்துப் பழுத்தன. எனினும் கோடிக்கணக்கான புஷ்பங்களில் மகரந்தப்பொடி தூவு

(தொடர்ச்சி 24-ம் பக்கம் பார்க்க)

# எலியின் கதை

அத்தியாயம் 4.

## புதிய நண்பன் கிடைத்தமை

அந்த அறையில் வசித்த எலிகள் நானும் நொண்டியும் மாத்திரமல்ல. அங்கே பெருந் தொகையான இந்திய எலிகளும் இருந்தன. ஆனால் நாங்கள் அவ்வெலிகளுக்குக் கிட்டப் போவதில்லை. ஒருநாள் ஒரு எலி ஒரு பூச்சியுடன் சண்டை பிடித்து அதைக் கொன்று விட்டது. இன்னொரு எலி அந்த உணவிற் பங்குபெற அதன் பின்னால் திரிந்தது. பூச்சியைக்கொன்ற எலியைக் கண்டால் எனக்குப் பயமதிகம் வந்துவிடும். அந்த எலிக்கு நீண்ட கன்னமீசையுண்டு. ஆகவே அதற்குக், "கன்னமீசையன்" என்று பெயர். ஆனால், கன்னமீசையன் என்னை ஏறிட்டுப் பார்க்கவுமில்லை. ஆனால் அதற்குப் பின்னாற்றிரிந்த எலி என்னைக் காலிற் கடித்து விட்டது. அக்கடி எனக்கு மிகுந்த நோவையுண்டுபண்ணிவிட்டது. உடனே கீச்சிட்டுக் கொண்டு எனது ஒதுங்கிடத்துக்கு நான்போய் விட்டேன்.

ஒருநாள் இரவு நான் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது, கன்னமீசையனும் கூட்டாளியும், எனது சகோதரர்கள் பொறியிலகப்பட்ட இடத்தை நோக்கி, விரைவாகப் போய்க்கொண்டிருப்பதைக் கண்டேன். அவைகள் எனக்கு நண்பரல்லாவிடினும், எலிகள் என்ற சாதியபிமானம்பற்றி, அவர்களுக்கு நேரவிருக்கும் ஆபத்தைத் தெரிவிக்காமலிருக்க முடியவில்லை. "நில்லுங்கள், நில்லுங்கள், நீங்கள் பொறியிலகப்படப் போகிறீர்கள்" என்று நான் உரத்துக் கூறினேன். கன்னமீசையன் திரும்பியென்னைப்பார்த்தது. "கடித்து அந்த எலியைக் கொன்றுவிடு. அங்கேயிருக்கும் உணவெல்லாவற்றையுந் தானும் தன்னினமும் உண்பதற்காகவே எங்களை இந்த எலி பயமுறுத்துகிறது" என்றது கூட்டாளி எலி. "என் சொல்லைக்கேளாமல் நீங்கள் போனால் உங்களுக்குக் கட்டாயம் ஆபத்து வரும்" என்றேன் நான். "எனக்குப் பயமில்லை" என்று கூறிக் கொண்டே யந்த எலி வேகமாக ஓடிற்று. அந்தோ பொறியிலகப்பட்டுக் கொண்டது. உடனே அந்த எலி மிகவும் உரத்தசத்தமாகக் கீச்சிட்டது. கன்ன மீசையன் வெளியே சிறிது நேரம் அசைவற்று மௌனமாக நின்றது. பின் நான் நின்ற இடத்துக்கு வந்தது. "எலியே! நீ என் உயிரைக் காப்பாற்றினாய். உன் அன்பை நான் என்றும் மறவேன். நான் இனிமேல் சிநேகிதர்களாயிருப்போம்" என்று என்னிடம் கூறிற்று. "சம்மதமே" என்று நான் சொன்னேன். எங்கள் சிநேகிதத்துக் கடையாளமாக நாங்கள் எங்கள் மூக்குகளை ஒன்றோடொன்று உரோஞ்சிக் கொண்டோம். கன்னமீசையனும் நானும் பல இடங்கட்கும் சென்றிருக்கிறோம். கன்னமீசையனுடைய இனத்தவர்கள் வசிக்கும் இடங்களுக்கும் நான் அதனுடன் கூடிக்கொண்டு போயிருக்கிறேன் அந்த எலிகள் எனக்கு யாதும் தீங்கு செய்யவில்லை.

(தொடரும்

கதைப்பகுதி

# ஞானம்பாள்

[மயூரம் வேதநாயகம்பிள்ளை அவர்கள் எழுதிய பிரதாப முதலியார் சரித்திரச் சுருக்கம்]

(திரு. மா. பீதாம்பரன்)

Rights Reserved

(முற்றொடர்)

ஞானம்பாள் என்னைப்பற்றிப் பிரஸ்தாபிக்கிறவரையில் என்னை ஒருவருங் கவனிப்பாரில்லை. அவள் பிரஸ்தாபித்த மாத்திரத்தில் எல்லாருடைய கண்களாகிய வண்டுகள் என்னுடைய முகத்தாமரைமேலே மொய்க்க ஆரம்பித்தன. சம்பந்த முதலியார் என்னைக் கட்டித் தழுவிக்கொண்டு செய்த ஸ்தோத்திரங்களுக்கு அளவு சங்கியை இல்லை. அவர் சந்தோஷத்தினால் என்னை எவ்வளவு இறுகக் கட்டிப்பிடித்தாரென்றால், நான் மூச்சு விட இடமில்லாமல் திக்குமுக்காட ஆரம்பித்தேன். நான் அவர் பிடித்த பிடியைத் திமிறிக்கொண்டு அவரைப் பார்த்து, 'ஞானம்பாளைக் கொண்டுபோனவர்கள் எனக்கு இன்னாரென்று தெரியவில்லை. வடக்கே இருந்து வந்து, தெருவில் ஞானம்பாளை வளைத்துக்கொண்ட நாலு பேர்களில் குண்டுபட்டு விழுந்துவிட்டவர்கள் போக, மற்ற இரண்டு பேர்களையும் பிடித்துக் கட்டிக்கொண்டு வந்திருக்கிறோம்; அவர்களை விசாரித்தால் உண்மை தெரியலாம்' என்று சொன்னேன். எல்லாரும் நான் சொன்னது சரிதான் என்று ஒப்புக் கொண்டு, அந்த இருவரையும் விசாரிக்கத் தொடங்கினார்கள். அவர்களில் ஒருவன் எங்

களைப் பார்த்துச் சொல்லுகிருன். "நாங்களிருவரும் பூங்காவூர்த் தாலுக்கா தாசில்தாருடைய சேவகர்கள். அவர் இந்த அம்மணியினுடைய அழகையும் குணதிசயங்களையும் கேள்விப்பட்டுத் தான் மணஞ் செய்துகொள்ள வேண்டுமென்று விருப்பமானர். அதைக் குறித்துத் தங்களுக்குப் பல கடிதங்கள் அனுப்பியும் தாங்கள் அனுகூலமான மறுமொழி அனுப்பாமையினல், எப்படியாவது இந்தப் பெண்ணரசியைக் கொண்டுபோய் விவாகஞ் செய்கிறதென்று நிச்சயித்து, அதற்குத் தகுந்த சமயம் பார்த்துக்கொண்டிருந்தார். நீங்கள் இந்தக் கிராமத்துக்கு வந்திருந்து மறுபடியும் தங்களூருக்கு நடுச்சாமத்திலே போகிறீர்கள் என்று அவர் கேள்வியுற்று, எங்களையும் ஒரு பல்லக்கையும் அதி ரகசியமாய் அனுப்பி, எவ்விதத்திலும் இந்த மனேன்மணியைக் கொண்டு வரும்படி உத்தரவு கொடுத்தார். அந்தப்படி நாங்கள் நேற்றைத்தினம் பாதிச் சாமத்தில் வந்து சேர்ந்து, இந்த வீட்டுமுன்பாக நிறுத்தப்பட்டிருந்த அனேகம் பல்லக்குகளின் மத்தியில் நாங்கள் கொண்டுவந்த பல்லக்கையும் வைத்துவிட்டு, மற்றவர்களைப்போல நாங்களும் படுத்துத் தூங்கினேம். விடிந்துபோனல் எங்களுடைய மோசம் வெளியாகுமென்று நினைத்து இருட்டிலே பயணம் புறப்படும்படி நாங்களே மற்றவர்களை எழுப்பிவிட்டோம். உங்கள் வீட்டு அம்மாதர்கள் எல்லாரும் தனித்தனியே ஒவ்வொரு பல்லக்கின்மேலே ஏறிக்கொண்டார்கள். இந்த அம்மணி வீட்டுக்குள் இருந்து, வெளியே வந்த உடனே, எங்கள் பல்லக்கின் கதவைத் திறந்து அதில் ஏறிக்கொள்ளும்படி சொன்னேம். இந்த அம்மணி கபடம் இல்லாமல் ஏறிச் சாத்திக்கொண்டு தூங்கிவிட்டார்கள். அந்தப் பல்லக்கைச் சிவிகையார் தூக்கிக்கொண்டு ஓடும்போது நாங்கள் இருவரும் பின் தொடர்ந்து போனேம். நாங்கள் மற்றப் பல்லக்குகளுடன் எங்களுடைய பல்லக்கையும் கொண்டு போவதுபோல் மாயம் பண்ணி, பிறகு கொஞ்சங் கொஞ்சமாய்ப் பின் வாங்கினேம். மற்ற வாகனங்களும் ஆட்களும் கண் மறைகிறவரையில் மெல்ல மெல்லக் கொண்டுபோய், இருட்டில் ஒருவருக்கும் தெரியாமல் எங்களுடைய பல்லக்கை வடக்கே திருப்பி, அதி வேகமாய்க் கொண்டு போனேம்.

நாங்கள் இருவரும் வெகுதூரம் பல்லக்குடன் சென்று, பிற்பாடு தாசில்தாருக்குச் சந்தோஷ சமாசாரம் சொல்லுவதற்காக நாங்கள் முந்திப் போய்ப் பல்லக்கில் அம்மா வருகிற சமாசாரத்தை அவருக்குத் தெரிவித்தோம். அவர் ஒரு வீட்டிலே தனிமையாய் இருந்துகொண்டு, சந்திரோதயத்துக்காகக் காத்திருக்கும் ஜாதகப் பக்ஷிபோல் அகமகிழ்ச்சியுடன் வழியை வழியைப் பார்த்துக்கொண்டிருந்தார். மத்தியானம் பதினைந்து நாளிகைக்குப் பல்லக்கு வந்து சேர்ந்தது. உடனே சிவிகையார் தாசில்தாரிடத்தில் வந்து, 'எசமான்கள் விரும்பின மாதரசியைப் பல்லக்குடன் கொண்டு வந்துவிட்டோம்; நாங்கள் பட்ட பிரயாசைக்குத் தகுந்த சன்மானம் செய்யவேண்டும்', என்று சொன்னர்கள். உடனே தாசில்தார் எழுந்து ஓடி, அதிக ஆவலுடன் பல்லக்கைத் திறந்து பார்க்க, உள்ளே ஒருவருமில்லாமல் சுத்த சூநியமாயிருந்தது. அவரும் நாங்களும் பல்லக்கின் மூலை முடுக்குகளெல்லாம் தேடிப் பார்த்தோம்; இந்த அம்மணியை எங்கும் காணேம். பஞ்சரத்திலிருந்த கிளி பறந்துபோன பிற்பாடு பஞ்சரம் வெறுமையாயிருப்பதுபோல் பல்லக்கு வெறுமையாயிருந்தது. தாசில்தாருடைய அப்பனும் பாட்டனும் தேடிவைத்த பொக்கிஷத்தை நாங்கள் அபகரித்துக் கொண்டது போல, எங்கள் மேலே ரௌத்ராகாரமாய்க் கோபிக்க ஆரம்பித்தார். அவர் அடிப்பார் என்று பயந்துகொண்டு, நாங்கள் கொஞ்சங் கொஞ்சமாய்த் தூர விலகினேம். எங்களை அடிக்க அவர்கையில் ஒரு ஆயுதமுமில்லாமல் இருந்ததால், நாங்கள் தெருவிலே கழற்றிவைத்திருந்த எங்களுடைய செருப்பை அவர் கையிலே தூக்கிக்கொண்டு துரத்தினர். நாங்கள் அகப்படாமற் சிட்டாய்ப் பறந்தோம்; நாங்கள் ஓட அவர் ஓட இவ்வகையாக வெகுதூரம் துரத்திவந்த பிற்பாடு அவர் கைமேலே இருந்த செருப்பை எங்கள்மேலே எறிந்தார். அந்தச் செருப்பு ஒருமரத்தின் மேலேபட்டு மறுபடியுந் திரும்பித் தாசில்தாருடைய முகத்திலே மோதிற்று. ஔஷதப் பிரயோகத்தினல் விஷம் இறங்குவதுபோல், செருப்படிபட்ட பிற்பாடு, தாசில்தாருக்குக் கோபம் தணிந்து, எங்களை நயமாய்க் கூப்பிட்டுக் காரியங்களை விசாரிக்க ஆரம்பித்தார். போகிகள் "நடுவழியில் ஒரு இடத்தில் கள்ளு குடிக்கிறதற்காகப் பல்லக்கை நிறுத்தினேம்" என்று ஒப்புக்கொண்டபடியால், அந்த இடத்தில் இந்த அம்மணி தப்பிப்போயிருக்கலாம் என்று உத்தேசித்து, உடனே தாசில் தாரும் அவருடைய நேசனும் இரண்டு குதிரைகளின்மேல் ஏறிக்கொண்டு, எங்கள் இருவரையும் கூட அழைத்துக்கொண்டு புறப்பட்டார்கள்.

# நிகலஸ் ஸாண்டர்ஸன்

[ஸி. எஸ். ஜகதீச சுந்தரம்பிள்ளை]

அகக்கண்ணின்றி புறக்கண்ணை மாத்திரம் உடைய நம்மவரிற் பலரை முகத்திற் புண்ணுடையவர் என அகக்கண்ணுடையவர் பழிக்கின்றனர். புறக்கண்ணுடையவர், அப்பழிப்புரை மெய்தானோ அகக்கண் நமக்கு அவசியந்தானோ என்று ஐயுறுகின்றனர். அவ் வையத்தை யொழிக்கக் கண்ணிழந்த ஸான்டர்ஸன் கண்ணுடையவரும் தேர்ச்சியடைதற்கரிய நூலும், கண்ணின்றிக் கற்றற்கே அரிய நூலுமான க்ஷேத்திரக் கணித நூலைக் கற்றுத் தேர்ச்சியடைந்து புறக்கண்ணினும் அகக்கண்ணே சிறந்ததென நிலைநிறுத்தினார். அன்னார் சரித்திரம் அடியில் வருவது.

இச்சரித்திரத்தால் புறக்கண்ணைவிட அகக்கண்ணே சிறந்தது என்னும் உண்மையை யறிவதோடு மற்றொரு உண்மையையும் அறிகிறோம்.

விழியிலானாகிய திருதராட்டிரன் பல நூல்களையும் கற்றவனென்றும், இராச நூல்முறையை யறிந்தவனென்றும் நூல்கள் முறையிடல் பொய்யன்று. அவன் அவ்வாறே அறிந்திருக்கலாம் என்று எண்ண இச்சரிதம் இடம் தருகிறது.

நிகலஸ் ஸாண்டர்ஸன் கி. பி. 1682ம் வருடத்தில் பிறந்தனர். அவர் ஒரு வருஷத்திய குழந்தையாய் இருக்கும்போதே, வைசூரியின் கொடுமையால் அவரது கண்கள் ஒளியிழந்தன. அவருடைய தந்தையார் அவரை வீட்டுக் கருகிலிருக்கும் பாடசாலைக்குக் கல்விகற்க இளம் பிராயத்திலேயே அனுப்பினார். அவர் இரண்டு நேத்திரங்களும் இல்லாதவராயிருந்தும் சுலபமாயும் விரைவாயும் கல்வியில் தேர்ச்சியடைந்தனர். அவர் உபாத்தியாயர் அவருக்குக் கல்வி கற்பித்த முறைதான் நமக்கு விளங்கவில்லை. சிறிது காலத்திற்கெல்லாம் இலத்தீன் கிரீக் என்னும் இரண்டு பாஷையிலும் தேர்ச்சியடைந்தார். இலத்தீன் பாஷையைப் பேசப் பழகிக்கொண்டார்.

வீட்டுக்கருகே யிருந்த பாடசாலையில் கல்விகற்று முடிந்தவுடன், ஸான்டெர்ஸன் தந்தையார் அவருக்குக் கணிதம் கற்பிக்கத் தொடங்கினார். அதில் ஸான்டெர்ஸனுக்கு ஒருவித விருப்பம் உண்டாக, விஷயங்களை விரைவில் உணர்ந்துகொண்டார். ஸான்டெர்ஸன் அந்தகரேயாயினும் கல்வியில் அவருக்கிருந்த திறமையைக் கண்டு, ஒரு பெரிய கனவான் கண்ணிலான் கற்கக் கனவிலும் கருதக் கூடாத நூலான க்ஷேத்திர கணிதத்தினை (Geometry) கற்பிக்கத் தொடங்கினார். சிறிது காலத்திற் கெல்லாம் தம் உபாத்தியார்களுக்கு உபாத்தியாயராக விளங்கும் ஆற்றலைப் பெற்றார். பிறகு தாமே வாசித்துணர்ந்து ஆனந்திக்கும் பாக்கியத்தை இழந்த ஸான்டெர்ஸன், தம் அருகே இருந்து புத்தகங்களை வாசிப்பதற்காகச் சிலரை அமர்த்தி, நிபுணர்களால் எழுதப்பட்ட அரிய பெரிய புத்தகங்களிலுள்ளவைகளை எல்லாம் அறிந்தார். கிரீக்கு தேசத்துக் கணித புத்தகங்களை ஆராய்ந்தார். யூக்லிட் (Euclid) முதலியோர் எழுதிய நூல்களையும் அவர் எழுதிய பாஷையிலேயே கேட்டறிந்தார்.

ஸான்டெர்ஸன் தந்தை மிகவும் ஏழையாதலால் சர்வகலாசங்கத்தினை (University) யடைந்து வாசிப்பதற்கான திரவியம் கொடுக்கச் சக்தியற்றவராயினார். ஆயினும் அவர் புத்திசாதுரியத்தை அறிந்த பலர் கேம்பிரிட்ஜ் சர்வகலா சங்கத்தில் கணித சம்பந்தமான விஷயங்களைச் சிறுவர்கட்கு உபந்நியாசிக்க ஏற்பாடுகள் செய்தார்கள். அவருக்கு அப்போது வயது இருபத்தைந்து. அச்சங்கத்தார் அவருக்கு உதவி புரிந்ததோடு புத்தகசாலைப் புத்தகங்களெல்லாம் உபயோகிக்கவும் அநுமதி கொடுத்தனர்.

முதலில் உபந்நியாசம் செய்ய ஸாண்டெர்ஸன் எடுத்துக்கொண்ட விஷயம் யாதெனில், நியூட்டன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட ஆப்டிக்ஸ் என்னும் நயன சாஸ்திரமேயாம். நியூட்டன் இருக்கும் சர்வகலா சங்கத்திலுள்ள ஆசிரியர்கள் அவர் கண்டுபிடித்த விஷயங்களில் சிலவற்றையே அங்கீகரித்திருக்க ஸாண்டெர்ஸன் அவ்விஷயத்தைத் தம் சொல்வன்மையினால் தெளிவாயும் அழகாயும், கேட்போர் விரும்பும் வண்ணம் பிரசங்கித்தார். அந்தகர் நயன சாஸ்திர நுணுக்கங்களை எவ்வாறு பிரசங்கிக்கக் கூடும் என்னும் ஆசங்கை நமக்கு உண்டாகலாம். ஆனால் அவர் பிரசங்கத்தைக் கேட்டவர்கள் 'விஷயத்தைத் தெளிவாய்ச் சொல்ல வல்லவர் அவரைவிட வேறு ஒருவர் இல்லை' யென்றே அபிப்பிராயப்பட்டனர்.

க்ஷேத்திர கணித உருவங்களைக் காட்ட விரும்புங் காலத்துத் தம்மிடமுள்ள பல துவாரங்கள் அமைத்த பலகையின் மூலமாகத் தாம் காட்ட விரும்பிய உருவத்தைக் காட்டுவார். பலகையிலுள்ள துவாரங்களில் ஊசிகளை வைக்கவேண்டிய இடங்களில் வைத்து வரிசைகளைக் காட்டுவதற்காக அந்த ஊசிகளில் கயிற்றைக் கட்டுவார். அந்த ஊசிகளின் உதவியினாலேயே அநேக கணக்குகளையும் செய்து கொள்வார். அவருக்கிருக்கும் அபார ஞாபக சக்தியே பிரசங்கத்திற்குப் பெரும் துணையாயிருந்தது. இந்தச் சக்தியினாலேயே எண்ணிறந்த கணிதவிஷயங்களை மனக்கணக்காகவே செய்துகொள்வார்.

ஸாண்டெர்ஸன் சிறுவர்கட்குக் கல்வி கற்பிப்பதில் அளவில்லாத ஆற்றலுடையவராக இருந்தமையால் சிறந்த ஆசிரியரென்று எல்லோராலும் புகழப் பெற்றார். அவரிடம் கல்விகற்ற மாணவர்கள் எல்லோரும் பரிக்ஷையில் தவறுவதே கிடையாது. ஸர் ஐஸக் நியூட்டன் பார்த்திருந்த வேலையே முடிவில் ஸாண்டெர்ஸனுக்குக் கிடைத்தது.

கி. பி. 1728ல் டாக்டர் ஆவ் லாஸ் (Doctor of Laws) என்னும் கௌரவப் பட்டம் பெற்றார். அவர் உத்தியோகத்திலமர்ந்திருந்தபோது, இரண்டாவது ஜார்ஜ் சக்கரவர்த்தி கலாசங்கத்திற்கு விஜயஞ் செய்ய, ஸாண்டெர்ஸன் யாவரும் வியக்குமாறு இலத்தீன் பாஷையில் உபந்நியாசஞ் செய்தார். இவர் கி. பி. 1739ம் வருஷத்தில் காலமானார்.

உல்லாச யாத்திரை—2

## காடுகளின் நடுவில் கல்மண்டபங்கள்

[மூர்த்தி]

வண்டிகள் மெதுவாக நகர்ந்து சென்றன. அந்த மண்பாதையில் விரைவாகச் செல்வது அபாயந்தான். மெதுவாகச் செல்வதற்கு இன்னுமொருகாரணம்; பாதையின் இருபுறமும் எங்கு பார்த்தாலும் பாழடைந்து கிடக்கும் பழைய கட்டடங்கள் தான் தென்பட்டன. பிரபுவின் சிறியவண்டி முன்னும் எங்கள் வண்டி பின்னுமாகச் சென்றன. இரட்டைக் குளம் எனப்படும் சிற்பவேலைப்பாடுகளமைந்த ஸ்நானக் கேணியின் சமீபம் இறங்கினோம். முழுவதுங் கருங்கற்படிகளால் ஆக்கப்பட்ட இவ்வழகிய குளங்கள் கவனிப்பார் இன்றிக் கிடக்கின்றன. அடியிலுள்ள அழுக்குச் சலம் நுளம்புகளின் இருப்பிடமாக இருக்கின்றது. சற்றுத் தூரத்தில் மரங்களின் நிழலில் தவஞ்செய்துகொண்டிருந்த ஓர் துறவி காணப்பட்டனர்; இவர்தான் ஸ்ரீபுத்தபகவான். பன்னிரண்டடி உயரமாகத் தனிக்கல்லிற் செதுக்கப்பட்டிருக்கிறார். ஆறு மைல் விஸ்தாரமான பாதை; எங்கே பார்த்தாலும் மண்டபங்களாகவே தென்பட்டன. தனிக்கற்களிற் செய்யப்பட்ட யானைகள் நீர்குடிக்குந் தொட்டியும், பணம்வைக்கும் பெட்டியுங் குறிப்பிடத்தக்கன. இவற்றைப் பார்த்தவுடன் அந்நாளில் இவற்றை உண்டாக்க எத்தனைக் கஷ்டம் உற்றிருப்பார்கள் என்பது எம் மனத்தை வருத்தியது. இப்பொழுது வெளியூர்களிலிருந்து பார்க்க வருபவர்கள் மட்டுமே இவற்றை அணுகுகிறார்கள். ஆனால் அவர்களுக்கும் ஒளிந்துகொண்டு எத்தனையோ மண்டபங்கள் இன்னும் மண்ணுள் இருக்கின்றன. இங்குள்ள கட்டடங்களில் ஒன்றின்படியில் யானை, குதிரை, எருது என்பவற்றின் உருவங்கள் பொறிக்கப்பட்ட சித்திர வேலையமைந்த கல் காணப்படுகிறது. இப்படிப்பட்ட கற்களைச் சந்திரகாந்தக் கல் என அழைக்கிறார்கள்; இலங்கையிலுள்ள சந்திரகாந்தக் கற்களில் இதுவே முதன்மை பெற்றதாம்.

ஜெயவதனராம சமாதி ஒரு மலைக் குன்றின்மேல் மண்மேடாய்க் காணப்படுகிறது. இவ் வரண்ட காட்சிகளைக் கண்ட எங் கண்ணுக்கு திசவீவாவும், ஈசுவரமுனியா (இசிறுமுனி) என அழைக்கப்படும் விகாரையும் குளிர்ச்சியைக் கொடுப்பனவா யிருந்தன. திசவீவா ‘தேவனம்பியதிசன்’ என்னும் அரசனால் கட்டப்பட்ட ஓர் பெரிய நீர்நிலையம். இதுவே தற்கால அனுராதபுரத்தின் செல்வங்களு ளொன்று. இந்நகர மக்கள் தமக்கு வேண்டிய நீர் முழுவதையும் இவ்வாவியின் மூலமாகவே பெறுகின்றனர். கிணற்று நீரையே தஞ்சமென்றிருக்கும் யாழ்ப்பாண மக்களாகிய எமக்கு இதைக் கண்டதும் ஒருமுறை இறங்கிக் குளித்தாலோ! என்றிருந்தது. குடிநீர் எடுக்கப்படுவதால் இவ்வாவியில் ஸ்நானஞ் செய்ய முடியாதென்று அறிந்ததும் எங்கள் மனதில் உண்டான குளிர்ச்சி போய்விட்டது. எனினும் ஈசுரமுனியாவில் ஏறி நின்றபொழுது எம்மையறியாது ஓர் இன்பம் உண்டானது. சுற்றிலுமுள்ள காட்சிகள் எங்கள் கண்ணைக் கவர்ந்தன யாம் இதுவரையும் பார்த்த கட்டடங்களும், வாவிகளும், கருங்கற் தூண்களுங் கூட ஓர் அழகிய படம்போல்க் காட்சியளித்தன. மலைக் குன்றின்மேலும், குகையினுள்ளும் செய்யப்பட்டிருக்கும் சித்திர வேலைகள் இவ்வாலயத்தின் அழகை அதிகப் படுத்துகின்றன. இயற்கை யழகுடன் சேர்ந்திருப்பின் எதுவும் இப்படித்தான்.

புராதன பொருள்களைச் சேமித்து வைத்திருக்குங் காட்சிச்சாலை யொன்றும் அனுராதபுரத்தில் இருக்கின்றது. முறிந்துபோன குத்து விளக்குகளும், உடைந்துபோன சிலைகளும் இங்கு மிகவும் செப்பமாகப் பூட்டி வைக்கப்பட் டிருக்கின்றன. இவற்றின் மத்தியில் வினாயகர், கந்தர், இலக்குமி உருவங்களைக் கண்டதும் எங்கள் மனதில் ஓர் புத்துணர்ச்சி உண்டானது. அநேக புத்த விக்கிரகங்களும் (முன் நிலத்தினுள் இருந்தவை) இங்கு சேமித்து வைக்கப்பட் டிருக்கின்றன.

அனுராதபுரிக்கும் மிகுந்தலை மலைக்கும் இடைத் தூரம் எட்டுமைல். இந்த மலையில் ஏறுவதற்கு அநேக படிக்கட்டுகள் உண்டு. படிக்கட்டு வழியாக ஏறிச் சென்றால் ஒரு குன்றின் மத்தியில் நீர்நிலை யொன்று காணப்படும். இதற்கு “நாக பொக்குணை” எனப் பெயர். இது ஸ்நானத்திற்கு உபயோகிக்கப் பட்டதாம். புத்த குருவாகிய மிகுந்தன், முதல் முதல் இலங்கைக்கு வந்தபொழுது அப்பொழுதிருந்த தீசராசனைச் சந்தித்தது இந்த மலையிலேதான். ஆனதாற்றான் இந்த மலைக்கு மிகுந்தலை என்னும் பெயர் உண்டாயிற்று, இம்மலையின் ஒரு புறத்தில் வெள்ளியாற் செய்யப்பட்ட மிகுந்தனின் படுக்கை காணப்படுகின்றது. அதி உயரமான இன்னொரு சிகரத்தில் மிகுந்தன் இருந்து ஆராதனை செய்த கல்லொன்று கிடக்கின்றது. எங்களுக்குச் சிங்களம் பேசத் தெரியாததால் இந்தக் கல்லைப் பார்ப்பதற்காக எவ்வளவோ உயரமான மலைச்சிகரத்தின்மேல் கால்கள் வலிக்க வலிக்க ஏறவேண்டியதாயிற்று. கீழே ஒரு சிங்களச் சிறுவன் நின்றான். மேலே என்ன இருக்கிறதெனக் கேட்டோம்; ஏதோ சொன்னான் அச்சிறுவன். எங்கள் அவசரத்தில் அவன் சொல்லியவை காதிற் படவில்லை. சிங்களந் தெரிந்தாலல்லவா பட்டிருக்கும். மேலுக்கு ஏறியே பார்த்து விடுவதென்று தீர்மானித்தோம். அதனால் இருந்த கால்வலியையும் மறந்து ஏறத் தொடங்கினோம்; அங்கு நின்று பார்த்தபொழுது நாலு பாகங்களிலுமிருந்த காடுகள்தான் எம் கண்களுக்குக் காட்சியளித்தன. இன்னொரு மலைச்சிகரம். அதையும் பார்த்துவிட்டே திரும்பவேண்டும். அதிற்றான் பழைய ஆலயமொன்றின் அடிப்பாகம் காணப்படுகின்றது. செங்கற்களினால் ஆக்கப்பட்டிருக்கின்றது. ஐயோ! இந்த மலையைப் பார்ப்பதற்கு ஒருமுறை ஏறி இறங்கிய வலிதீர நாலு நாட்கள் பிடித்தன. மலையினுச்சியில் வசித்தவர்கள் எவ்வாறு தம் வாழ்நாட்களைக் கழித்தனரோ? ஏறுவதும இறங்குவதுந்தான் அவர்களுக்கு வேலையாக இருந்திருக்கும்.

தானந்த மான சகச நிருவிகற்ப, ஆனந்த நிட்டைஅருள் ஐயா பராபரமே.

# மாயவேடனும் மங்கையும்

[க. சே.]

ஒரு அடர்ந்த காடு. நான்கு பக்கமும் மலைகள். மலை நதிகள் அழகியதாக நகர்கின்றன. மரங்கள் சன்னல் பின்னல்களாக மண்டி வளர்ந்திருக்கின்றன. அவற்றின் மேலே பூக்களும் கனிகளும் அசைகின்றன. கீழே விழுந்த இலைகள் கடல்போல இருக்கின்றன.

ஆசைபெறவிழிக்கும் மான்கள் ஒரு புறம். அவைகள் அஞ்சும்படி சப்திமிடும் புலிகள் மறுபுறம் அன்பொடு பாடும் அழகிய புட்கள் இன்னொருபுறம். ஆங்கு ஓர் பால் ஆரவாரிக்கும் சிங்கம். அதன் அதிர்ச்சியால் கலங்கும் யானை இன்னோர் பால். இவைகள் தன்மேல் முட்டாது மயங்கும் தவளை புதர் இருட்டில்.

திசை என்பது தெரியாத இருள். செல்வதற்கு பாதைகளும் இல்லை. தப்பித் தவறிச் செல்வோரும் முள் மிதியடியில் நடப்பதுபோலத் தான் நடக்கவேண்டும்.

அந்த அடர்ந்த காட்டிற்றான் செல்கிறாள். யார் தெரியுமா? காதலனைத் தேடி அலையும் ஓர் கன்னிகை. திக்கோ தெரியவில்லை. தெய்வந்தான் துணை என்பது தான் அவள் எண்ணம். காதலின் உத்வேகம் எப்படி இருக்கிறது? அது அவளைப் பைத்தியம் ஆக்கிவிட்டது. தாய் தந்தை வீடு வாசல் என்ற எண்ணங்கள் அந்தப் பைத்தியத்தின் முன் எங்கே? ஆதவன் முன் மின்மினிபோல ஆகிவிட்டன. அவள் மனதில் அவன் எண்ணந்தான். அதனாற்றான் அந்தக் காட்டிற் கூட அவள் அப்படி அலைகின்றாள்.

கால் அலுத்துவிட்டது. கை சோர்ந்து விட்டது பற்றைகளைப் பிரித்து. கண் தூக்கம் கொண்டுவிட்டது. அதிக களைப்பு. அந்தோ என வீழ்ந்துவிட்டாள் அந்நங்கை.

அடுத்த நிமிடம் அவ்விடத்திற்கு ஒரு வேடன் வந்தான். கையில் ஒரு வேல். இடுப்பில் உடைதோல். வந்ததும் நங்கையைக் கண்டுவிட்டான். அவள் அழகில் சொக்கிவிட்டான். பார்வை அவ்வளவும் ஒருவிதம். அதற்கு ஏற்றபடி தான் சம்பாஷணையும்.

பெண்ணே! ஏன் சோர்ந்து படுத்திருக்கின்றாய்? இறைச்சி இருக்கிறது. அது மாத்திரமா? கள்கூட இருக்கிறது. இவைகள் பிடிக்காவிட்டால் இனிய கனிகள் இருக்கின்றன. வா போகலாம்.

அண்ணா! உங்கள் அன்புக்காக நிரம்ப வந்தனம்.

சரி, ஆனால்

என்ன? ஆனால்

பெண்ணே! உன்னைக் கண்டமுதல் பழைய கள்ளைக் குடித்தமாதிரி மனமானது துள்ளுது. அதை அடக்க நீ ஒரே ஒரு முத்தம் கொடுத்தாலே போதும்.

அண்ணா! இந்தக் கொடுமை வார்த்தைகள் வேண்டாம். என்னைப் பிறன் ஒருவன் கண்ணாலம் செய்துவிட்டான். ஆனபடியால் நீர் கண்ணாலும் பார்க்கக்கூடாது.

சரி! சரி வேண்டாம்.

என்ன? வேண்டாம்.

ஏடி! சாத்திரங்கள் வேண்டாம். உனது இன்பம் மாத்திரம் தான் வேண்டும், என்றான் வேடன். அவளுக்கு உள்ளம் பதறுகிறது. வேடனும் விட்டபாடில்லை. கிட்ட நெருங்கினான். காதலி தன் காதலனை நினைத்தாள். ஓ! என்று மூர்ச்சையுற்று வீழ்ந்தாள். சற்று நேரத்தில் எழுந்தாள்.

ஆ! என்னவியப்பு. வேலேந்திய வேடன் எங்கே? அவன் நின்ற இடத்தில் இப்போ நிற்பவன் யார்? அவள் தேடிச் சென்ற காதலன் வேய்ங்குழலோடு காட்சி அளிக்கும் கண்ணன் தான். அவளுக்கு அளவிலா ஆநந்தம். தேடிய பூண்டு அது வல்லவா? கண்ணா? வேடன் எங்கே போனான்? அல்லது உன்னைத் தான் கண்டு அலறி வீழ்ந்தேனோ? மணிவண்ணா! எனது அபயக்குரலில் வாழ்விக்க வந்தாயே என்று அவன் மேல் சாய்ந்தாள். பின் அவர்கள் சம்பாஷணை வெகுஜனுர். காதலர் கதைக்குமிடத்து நமக்கென்ன வேலை.

(பாரதியின் "காட்டில் தேடுதல்" என்பதைத் தழுவியது.)

# தேகாப்பியாசம்

மனிதன் தன் வாணாட்களைச் சந்தோசமாகக் கழிக்க வேண்டின், அவன் நோய் பிணியற்றவனாகவும், தனவந்தனாகவுமிருத்தல் வேண்டும். மனிதர் நோயில்லா வாழ்வுடையவர்களாயிருப்பதற்கு, அவர்கள் முறையான தேகாப்பியாசஞ் செய்து, சுத்தகாற்றையும், நல்ல ஆகாரத்தையும் உட்கொள்ளல்வேண்டும். மூளையால் வேலை செய்வோரே விசேஷமாய் தேகாப்பியாசம் எடுத்தல்வேண்டும்.

மனிதர் பல வழிகளால் தமது சரீரத்திற்கு அப்பியாசங் கொடுக்கலாம். நாள் முற்றும் சரீரப் பிரயாசையான வேலை செய்வோருக்குத், தேகாப்பியாசம் வேண்டியதில்லை. மனதால் வேலை செய்வோருக்கு, மனவாற்றிக்காகவும் அவயவங்களுக்கு அப்பியாசங் கொடுப்பதற்குந் தேகாப்பியாசம் இன்றியமையாதது.

தேகாப்பியாசத்தை எவரும் பல முறைகளால் எடுத்துக்கொள்ளலாம். சிரமப் பயிற்சியாகவும் உல்லாச வுலாத்தாகவும்; சரீரத்துக்குக் களைப்பையும் மனதுக்கு நிம்மதியையுங் கொடுக்கும் விளையாட்டுகளாகவும் தேகாப்பியாசஞ் செய்து கொள்ளலாம்.

"அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு" அது போலவே அளவுக்கு மிஞ்சித் தேகாப்பியாசம் செய்யக்கூடாது. தேகாப்பியாசஞ் செய்யும்போது நமது தேகத்திற் களைப்பு உண்டானதும், அதனை நிறுத்திக் கொள்ளல்வேண்டும். தேகாப்பியாசஞ் செய்த பின்பு சிறிது நேரம் ஆறியிருத்தல் வேண்டும். நமது தேகத்திலிருந்து வெளிவருந் நீரை யுடனே துடைத்தல் அவசியம். களைப்பு நீங்கியதும் தேகத்திற் படிந்த அழுக்குப்போகக் கழுவுதலும் நல்லது.

தேகாப்பியாசஞ் செய்வதினால் நாம் அதிக நன்மையை அடையலாம். தேகாப்பியாசஞ் செய்து நமது தேகத்தைக் கழுவிய பின்பு. நாம் இலேசாக இருப்பதை யுணரலாம். தேகாப்பியாசம் நமது சாப்பாட்டை விரைவிற் சீரணிக்கச் செய்து, அதிக காற்றைச் சுவாசிக்கச் செய்வதினால் நமது இரத்தமும் நன்றாக ஓடும். இதனால் நாம் நோயற்ற வாழ்வு உடையவராகலாம். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்."

T. சேபஸ்தியாம்பிள்ளை S. S. C. இளவாலை

அல்லெல்லாந் தீரனக் கானந்த மாகவொரு, சொல்லையென்பால் வைத்ததையென் சொல்வேன் பராபரமே.

# "என் மனதைக் கவர்ந்த மிருகேந்திரன்"

மிருகநாளன்று (4-10-38)
மூளாய் சைவ பிரகாச வித்தியாசாலையில், பொன்னாலை,
ச. வரதராசனால் வரையப்பட்டது.

என் மனதைக் கொள்ளை கொண்ட மிருகங்கள் பலவுள. பசு, யானை, மான், குதிரை, நாய், பூனை... இப்படி எத்தனையோ மிருகங்களெல்லாம் என் மனதை ஒவ்வொரு வகையில் கவர்ந்துள்ளன. ஆனால் எல்லாவகையாலும் என் உள்ளத்தைப் பறித்த மிருகம் "மிருகேந்திரன்" ஒன்றுதான்.

"மிருகேந்திரன்" மிகவும் நல்லவன். அவன் ரொம்பப் பொல்லாதவன் எனப் பலர் எண்ணியிருக்கலாம். ஆனால் அது தவறு. சிங்கராசன் தன்னுடைய புத்திக் கூர்மையாலும், வலிமையாலும் மற்ற மிருகங்களுக்கெல்லாம் தலைவனாய் விளங்குகின்றான். தனக்குப் பசி எடுத்த நேரமேயல்லாது மற்ற நேரங்களில் மிருகராசன் பிற மிருகங்களைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டான். பசி கொண்ட நேரங்களில் ஏதாவது ஒரு மிருகத்தைச் சிங்கராசன் பார்த்து விட்டானேயானால் அவனுக்கு அந்த மிருகத்தினிடம் அன்பு அதிகரித்து விடும். ஒரு வரிக்குதிரையைச் சிங்கராசன் பார்த்துவிட்டானென்று வைத்துக் கொள்வோம். அவன் உடனே ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அந்த வரிக்குதிரையைக் கட்டித் தழுவிக் கொள்வான். "ஓருயிரும் ஈருடலும்" என்று இந்த மனிதர்கள் செல்லுவார்களே! அவ்வளவோடுகூட அந்த இருபிராணிகளின் அன்பு நின்றுவிடுவதில்லை. சிங்கம் வரிக் குதிரையைக் கட்டித் தழுவிய சிறிது நேரத்திற் கெல்லாம் வரிக்குதிரையை அங்கே காண முடியாது. அந்த இரண்டு பிராணிகளும் அன்புப் பெருக்காற் போலும் "ஓருயிரும் ஓருடலும்" ஆகிவிடுகின்றன. என்னே! மிருகேந்திரன் அன்புப் பெருக்கம்.

தன்னுடன் எதிர்த்தவரை மிருகேந்திரன் சும்மா விடமாட்டான். ஒன்றில் தான் வீரசுவர்க்கம் எய்துவான். இன்றேல் பகைவரை அந்த இடத்திற்கு அனுப்புவான். சுத்த வீரனான மிருகராசன் பேடிகளை உயிரோடு வைத்திருக்க விரும்பமாட்டான். "பேடிகள் இவ்வுலகிற்கு உதவாதவர்கள்" என்பது அவனுடைய வீர எண்ணம். இதை விளக்க ஓர் பிரபல வேட்டையாளர் தம்முடைய சொந்த அனுபவத்தைப் பின் வருமாறு கூறுகிறார்

"நானும் எனது நண்பனும் ஒருநாள் சிங்கவேட்டையாடுவதற்காக ஆபிரிக்காக் காட்டிற்குள் புகுந்தோம். எங்கள் கைகளில் துப்பாக்கிகள் தயாராய் இருந்தன. ஆனால் என் நண்பன் ரொம்பப் பயந்தவன். எனக்கு மட்டும் சிங்கங்களின் குணங்களைப்பற்றி நன்றாகத் தெரியும். வெகு நேரம்வரை காடு முழுவதும் அலைந்து திரிந்தபின் கடைசியாக ஒரு சிங்கத்தைச் சந்தித்தோம். அது ஒரு ஆண்சிங்கம். எங்களைக் கண்டதும் அது பிடரி மயிர்களை உலுப்பி விட்டுக்கொண்டு கம்பீரமாக நிமிர்ந்து பார்த்தது. நானும் அதை எதிர்த்து நின்றேன். ஆனால் எனது நண்பனோ சற்றுத் தூரத்திற்கப்பால் நின்று விட்டான். நான் துப்பாக்கியை உயர்த்திச் சிங்கத்தை நோக்கி ஒரு முறை சுட்டேன். ஆனால் சிங்கம் அந்தச் சூட்டையும் தாங்கிக் கொண்டு என்னை நோக்கி அடியெடுத்து வைத்தது. உடனே நான் பின்னுமிரண்டு முறையாகச் சுட்டேன். அது என்னுடைய சூட்டைப் பொருட் படுத்தாமல் என்னை நெருங்கிவிட்டது. என்னுடைய கைகள் படபடத்தன. மார்பு "திக், திக்" என்று அடித்துக் கொண்டது. இனிச் சுடுவதற்கு இடமில்லை. ஐயோ! கடவுளே! இன்னுமொரு நிமிசத்தில் என்னுடைய உயிர் போய் விடப் போகின்றதே!...... ஆனால் அடுத்த நிமிசம் ஓர் எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்தது. என்னை நோக்கி வந்த சிங்கம் திடீரென்று எனக்குப் பின்புறமாக ஓடிற்று. நான் வியப்பும், நயப்பும் அடைந்து திரும்பிப் பார்த்தேன். எனது நண்பன் அவசரமவசரமாக மரத்தில் ஏறிக் கொண்டிருந்தான். சிங்கம் அவனை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. நான் உடனே இதுதான் சமயமென்றறிந்து "டபார்! டபார்! டபார்!" என்று மூன்று முறை சிங்கத்தை நோக்கிச் சுட்டேன். அடுத்த நிமிசம் சிங்கம் சுருண்டு கீழே விழுந்தது. நான் சந்தோஷம் பொங்க எனது நண்பனை மரத்தினின்றும் இறங்கச் சொன்னேன். ஆனால் அவன் பயத்தினால் மறுத்து விட்டான். கடைசியாக நான் இறந்து கிடந்த சிங்கத்தின் மேல் ஏறி நின்று காண்பித்தபின் தான் அவன் இறங்கினான். நல்லகாலம். அன்று அவன் என்னுடன் வந்திராவிட்டால் நான் நிட்சயமாக இறந்து போயிருப்பேன். சிங்கம் என்னை நெருங்கிய போது எனது நண்பன் பயத்தினால் திரும்பி ஓடியிருக்கிறான். "பயந்து ஓடுபவர்களையே கொல்லுவது" சிங்கத்தின் குணமாகையால், எனது நண்பன் ஓடும்போது என்னை நெருங்கிய சிங்கம் என்னை விட்டு விட்டு என் நண்பனைத் துரத்தியிருக்கிறது. அதற்கிடையில் நான் காரியத்தை முடித்து விட்டேன்."

மிருகேந்திரனைப் பற்றி அதிகம் கூற வேண்டுவதில்லை. அவன் தனது பிடரி மயிர்களை உதறித் தள்ளிக்கொண்டு தலையைக் குனிந்து இடி முழக்கம்போல் கர்ச்சனை செய்யும் அந்தக் கெம்பீரமான தோற்றம் ஒன்றே அவன் எனது மனதைக் கவருதற்குப் போதுமானது.

ஈழகேசரி கல்வி அனுபந்தம்
தனிப்பிரதி விலை சதம்—3
25 பிரதிகள் விலை சதம்—50
தபாற் செலவு வேறு
ஆண்டுச்சந்தா ரூபா 2.
முற்பணமின்றி அனுப்பப்படமாட்டாது

# ஈழகேசரி இளைஞர் சங்கம்

பிள்ளைகளே!

இப்பொழுது மழை, தண்ணீர் இல்லை. பயிர்பச்சை எல்லாம் கருகி வாடுகிறது. எரிவாவிகளில் நல்ல தண்ணீர் இல்லை. வெய்யிலின் காங்கையும் அகோரமும் பொறுக்க இயலாது. ஆடு, மாடு, கோழி முதலியவைகளெல்லாம் நின்ற நின்றபாட்டில் விழுந்து இறக்கின்றன. வீசுகிற காற்றிலும் ஒரு நச்சுத்தன்மை கலந்திருக்கிறது. இங்கே எல்லோருக்கும் அடுத்தடுத்து, மாறிமாறித் தடுமன் காய்ச்சல்; அதுவும் மூன்றுநாளைக் காய்ச்சல் என்றால் சொல்லவேண்டியதில்லை. காய்ச்சலோடு மாத்திரம் நில்லாமல் தொண்டை அடைப்பு இருமல்போன்றவைகளும் சேர்ந்துவரும். இலங்கையின் எப்பாகத்திலுமல்லாமல் இந்தியா எங்கும் பரவியிருக்கிறது. ஆனபடியால் ஒருவரும் அகால நேரங்களில் வெளியே செல்லவேண்டாம். உங்களில் அனேகர் தார்றோட்டில் வெறுங்காலோடு நடந்து சென்றதை நான் கவனித்திருக்கிறேன். அப்படிச் செய்யவேண்டாம். ஒரு குடையும் காலுக்குச் செருப்பும் அவசியம் ஒவ்வொருவரும் வைத்திருக்கவேண்டியவைகள். அவைகளை வாங்க இயலாதவர்கள் வேறு முறைகளைக் கையாளவேண்டும். பள்ளிக்கூடத்துக்குப் போகும்போதும் வீடு செல்லும்போதும் ஒருவரோடொருவர் சோலி சுறட்டுப் பிடிக்காது தள்ளுப்படாது சந்தோஷமாகச் செல்லவேண்டும். இன்னும் ஒரு கெட்ட செயல் உங்களில் உண்டு, கார் வண்டிகளுக்கு விலத்துவதில்லை. அது உயிருக்காபத்தான தென்பதை மறக்கப்படாது. விளையாட்டு வயதில எல்லாம் விளையாட்டாகத்தான் தோற்றும். பின்பு 'புலி' வரும்போது நீங்களே உணர்வீர்கள். அன்றைக்கு நான் ஒருக்கால் கோட்டடிக்குச் செல்லவேண்டி நேர்ந்தது. தூரத்தில் ஒருகார் வந்துகொண்டிருந்தது. பள்ளிக்குச் சென்ற சிலரில் ஒருவன் தான் தூக்கக்கூடிய கல்லொன்றை றோட்டில் தூக்கி எறிந்தான். கார்க்காரன் மெல்லக்காரை நிற்பாட்டி கல்லு வைத்தவனுக்குக் கன்னத்தில் ஒன்று கொடுத்து மற்றவர்களையும் தூரத்திவிட்டு வாய்க்கு வந்தபடி எசித்தூற்றினன். விளையாட்டு என்னவாய் முடிந்ததென்று பாருங்கள். அந்தப்பிள்ளையின் தாய் தகப்பனுக்குக் கெட்ட பெயர். சேர்ந்துபோன பிள்ளைகள், பள்ளிக்கூடம், உபாத்தியாயர்கள் இளைஞர் சங்கத்தில் அங்கத்தவனுயின் எனக்கும் பாட்டிக்கும்; கடைசியில் எல்லாருக்குமே வீண் பெயர். கெட்டவன் என்று ஒருகணத்தில். ஆனல் நல்லவன் என்று மற்றவர்கள் கவனிப்பதற்குப் பல வருஷம் என்பதை மனதிற் பதியுங்கள்.

அறிவைப் புகட்டக்கூடிய சிறுகதை படிப்பனை முதலானவை ஒவ்வோர் வெளியீட்டிலும் என் குழந்தைகள் அனுப்புகின்றார்கள். மிகவும் சந்தோஷம். அப்படியே எல்லோரும் முயற்சிக்கவேண்டும். பேத்திகளில் ஒருத்தியே தலை சிறந்து தன்னல் இயன்றவைகளைச் செய்து வருகிருள். அப்பேற்பட்ட பிள்ளைதான் பின்னுக்கு நல்லாக இருக்கும். ஒவ்வொரு வெளியீட்டிலும் "தங்கமணி" யின் விஷயங்களை மற்றைப் பேத்திகள் கண்டதில்லையா? ஆணே பெண்ணே ஒவ்வொருவரும் எளிய நடையில் சில பல எழுத முன்வாருங்கள். இரண்டு கிழமைகளுக்குப் பின்னல் ஒரு பரிசு அளிக்கப்படும். அதன் விபரம் அடுத்தவாரத்தில் தெரிவிக்கப்படும்.

பிள்ளைகளே! வயதுசென்ற காலத்தில் மறதி அதிகமாக இருக்கிறது. உங்களுக்கு முக்கியமான ஒன்று குறிப்பிட மறந்து விட்டேன். மன்னிக்கவும். அது என்னவென்று நீங்கள் உங்கள் தலையை உடைப்பதற்குள் நானே வருத்தாது சொல்லுகிறேன். தீபாவளி. ஆனல் தீபாவளி வந்து நிற்கிறேன் போகிறேன் என்று கூடச் சொல்லாமல் மெல்ல நழுவிவிட்டதே! அதை நினைக்கும்போது வயிறுபற்றி எரிகிறதே! என்றெல்லாம் நினைக்கக் கூடும். துக்கப்படாதீர்கள். இதுதான் காலசக்கரத்தின் பலன்.

நான் உங்களுக்குத் தீபாவளியைப் பற்றிய சரிதை கூறவில்லை. எனக்கு முன்னரே நீங்கள் அதைப்பற்றி சகலதும் அறிந்திருப்பீர்கள். ஆனாலும் நான் சில சொற்களில் அடக்குகிறேன். கவனமாக வாசித்துப் பொருளை அறியுங்கள்:— (மது அரசன் – தீண்டாமை அரசன்) [ காந்திஜீ ] தீபாவளி – மால் – பூமாதேவி – நரகாசுரன் – அவன் மகன் – பட்டாபிஷேகம் – இந்திரன் முறைப்பாடு – கிருஷ்ணர் – சத்தியபாமா – போர்க்களம். நரகாசுரன் குற்றுயிர் – பாமாபுத்திரசோகம். அசுரன் வரம். மேலேகாட்டியுள்ள சொற்களில் அடங்கும் கருத்தே தீபாவளி. அது தீபவரிசை எனப்படும். ஒவ்வோர் இடங்களினும் ஒவ்வோர் விதமாகக் கொண்டாடுகிறார்கள்.

என் அன்புக்குரியவர்களே! உங்கள் பாட்டி - என் மனைவி - உங்களது தீபாவளிக் கொண்டாட்டம் எப்பேற்பட்டது என்று அறிய ஆவலுள்ளவராயிருக்கிறார். நீங்கள் எப்படி அனுபவித்தீர்கள் என்பதை அறிவிக்கவும்.

ஒன்று. நீர்வேலியிலிருக்கும் சிறுவர் சிறுமிகள் தங்கள் கிராமத்திலேயே ஓர் குட்டிச் சங்கம் கூடி இருப்பதாகத் தெரிவித்தனர். நானும் பாட்டியும் அங்கு நேரே போக இயலாதபடியால் வாழ்த்துச் செய்தி அனுப்பினேம். நீங்களும் உங்கள் கிராமங்களில் ஒரு சிறு சங்கத்தை நிறுவுங்கள்.

"தாத்தா"

---

(17-ம் பக்கத் தொடர்ச்சி)

தல் முடிந்த காரியமா? ஆராய்ந்தார்கள். ஆழ்ந்தசிந்தனையாலும் ஆராய்ச்சியாலும் ஏதாவதொரு பூச்சியினுதவியால் இதைச் செய்து முடிக்கலாமென்று கண்டார்கள். ஒருவகைக் குளவியாலேயே இதைச் செய்து முடிக்கலாமென்று கண்டு அதைக்கொண்டுவந்து தோட்டங்களிலே வளர்த்தார்கள். இப்போது அக்குளவி தானகவே அத்திப்பழத்தோட்டங்களிலே குடியேறிவிட்டது. இதுபோன்ற மகரந்தப்பொடி மாற்றலைக் குளவிகள் மூலம் செயலிற் கொண்டுவந்ததினலன்றோ அத்திப்பழத்தோட்டங்களங்கு மலிந்திருக்கின்றன.

யாழ்ப்பாண நாட்டிலே மிகக் கிளைத்துவளர்ந்த நாகதாளிப் பற்றைகளை முற்றாயழித்து விட்டதும் ஒரு பூச்சியேயன்றோ?

---

[illegible] 'திருமகள் நிலைய'த்திலிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் 'தலையாட்டி'யிலுள்ள
[illegible]மகள் அச்சியந்திரசாலையில் 1938-ம் ஆ அக்டோபர் மீ 30உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.